# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 145/1 — 1975 ජනවාරි මස 05 වැනි ඉරිදා — 1975.01.05**

**145/1 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு சனவரி மாதம் 05 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல் இல. 73/1/78

**1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆந் தேதிய 62/9 இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பறாவுக்கான மதிப்பீட்டு கொ. ஈ. கே. விலை** 1975 01 06 **திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்திற்கு, ரூபா** 2,658.37 **ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.**

2. **கொப்பறா, தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—**

| ஒவ்வொரு தொன் கொப்பறாவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | | ஒவ்வொரு தொன் தேங்காய்த்துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | | ஒவ்வொரு 1,000 தேங்காய்களுக்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|---|---|---|
| ரூ. ச. | | ரூ. ச. | | ரூ. ச. | | ரூ. ச. |
| 1,207 94 | .. | 1,775 71 | .. | 1,508 66 | .. | 301 35 |

3. **சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம்பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.**

என். சிவரத்தினம்,
**முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.**

**எனது இல. 744/63,**
**இலங்கை சுங்கம், கொழும்பு,**
**1975 ம் ஆ** சனவரி **மீ** 05 ந் வ.

---

### சுங்க அறிவித்தல் இல. 73/2/77

**1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆந் தேதிய 69/3 இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு** 1975 01.06 **திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும் :—**

**இந்தத் தீர்வை,**

(i) **1968 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ஆம் தேதியில் வெளியிடப்பட்ட 14,793 ஆம் இலக்க அறிவித்தலினுல் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் எத்தகைய விவரணஞ்சார் ஒவ்வொரு இருத்தல் இறப்பர் மீதும் விதிக்கப்பட்ட ஓரே வீதமான மூன்று சதத்துக்கும்,**

(ii) **சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதாவது ஓர் எழுத்திலுள்ள சட்டத்தின் கீழ் எத்தகைய விவரணஞ்சார் இறப்பர் மீது விதிக்கத்தக்க, கொடுக்கத்தக்க ஒரு ஏற்றுமதித் தீர்வைக்கும்,**

**மேலதிகமானதாதல் வேண்டும் என்றும்,**

| இறப்பர் | | ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு இருத்தல் ஆர். எஸ். எஸ். தரம் I இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி | .. | 1.58 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இருத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை | .. | 0 35 |

என். சிவரத்தினம்
**முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.**

**எனது இல. 744/64,**
**இலங்கைச் சுங்கம்,**
**கொழும்பு,**
**1975 ம் ஆ** சனவரி **மீ** 05 ந் வ.

---

**கவனிக்க.**—144/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இலக்கம் 144/19


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*